மன்னர்
பாஸ்கர சேதுபதி பதிகங்கள்

பதிப்பாசிரியர்
டாக்டர். எஸ். எம். கமால்

வெளியீடு
சர்மிளா பதிப்பகம்
21, ஈசா பள்ளிவாசல் தெரு
இராமநாதபுரம்

இந்த நூல்பற்றி ....

சேதுபதி மன்னர்- செழுங்குடியில் எழுந்த செங்கதிர்ச் சூரியன் மன்னர் பாஸ்கர சேதுபதி என்றால் மிகையாகாது. அவரது பெற்றோர் இட்ட பெயரும் பாஸ்கரன் என்பது- சூரியன் என்ற பொருளில் தான். இந்த அரசகுமாரன் தனது ஐந்து வயதுக்குள் தந்தையை இழந்த போதிலும், ''தந்தையொடு கல்வி போம்'' என்ற தமிழ் மூதுரைக்கு முரணாக எண்ணை யும் எழுத்தையும் ஏதறக் கற்றுத் தெளிவதற்கான வாய்ப்பை, அன்றைய அந்நிய அரசு செய்தது.

மன்னரது மக்கள் என்ற முறையில் சிறுவன் பாஸ்கர னும், அவனது இளவல் தினகரனும் சென்னை நகர் லாங்டன் கார்டன் ஆங்கிலப் பள்ளியிலும், பின்னர் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியிலும் பயிலுமாறு செய்யப்பட்டனர். இவர்களைக் கண் காணித்துப் பராமரித்து வர, ஆங்கிலநாட்டுத் தாதியரும் ஆசானும் நியமிக்கப்பட்டனர். கவனத்துடன் கண்டிப்பும், கனிவும் மிகுந்த புதிய சூழ்நிலையில் ஆங்கிலத்துடன் தமிழும் சமஸ்கிருதமும் பயின்று, புலமை பெற்று பெருமையும் மிக்க பட்டதாரி இளைஞனாக வளர்ந்தார் பாஸ்கரர். பரந்த இந்த பாரத நாட்டின் பல்வேறு மக்களின் வாழ்க்கை நிலையை நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்பான சுற்றுப்பயணம் ஒன்றை நமது நாட்டின் வட மாநிலங்களிலும், இலங்கையிலும் மேற் கொண்டு திரும்பினார். மன்னராவதற்கு முன்னர் மக்களையும் அவர்களது வாழ்க்கையையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா?

சேது நாட்டின் நிர்வாகத்தை மேற்கொண்டு மன்னரான இவரது வாழ்க்கை முழுமையும், மக்களுக்கும் மகேசனுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையாக அமைந்தது. தமது மகத் தான முன்னோர்களது அடிச்சுவட்டில், தமது நிர்வாகமும் நடை போட வேண்டும், எனக்கருதிய அவர் அந்த நோக்கிலே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இந்த அரசியல் பணி ஒருபுறம் இருக்க, சைவசித்தாந்தத்தில் செழு மையுற்று இருந்த அவரது விழுமிய சிந்தனைகள் ஆன்மீகத்தில்

ஆழப்பதிந்து நின்றன. பிரபஞ்சத்தின் அனைத்துப் படைப்பு களையும் தனதாக, இறைவனது படைப்புகளாகக் கொண்டு, இறைவனையடைய முயற்சிப்பது தானே ஆன்மீகத்தின் அடிப் படை. ஆதலால், தமது ஆளுகையில் உள்ள அனைத்துக் குடி மக்களது இடர்களைக் களைவதில் ஈடுபட்டார் இந்த மன்னர்.

வறுமையிலும் சிறுமையிலும் நலிந்து வேதனைப்படும் ஏழை எளியவருக்கும், பைந்தமிழ் பாடி வரும் புலவருக்கும், பாவாணருக்கும் பொன்னும் பொருளும் அள்ளி வழங்கி அகமகிழ்ந்தார். தங்களது இறுதிக் கடமையாகிய ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள எண்ணி இருந்தும் இயலாத இஸ்லாமியருக்கும், தங்களது வாழ்க்கையின் குறிக்கோளான போப்பாண்டவரைச் சந்தித்து ஆசி பெற விரும்பும் கிறித்தவ மக்களுக்கும் பயண உதவியாகப் பொருள் வழங்குவதாக பத்தி ரிக்கை வாயிலாகச் செய்தி விடுத்தார்.

மேலும், இராமநாதபுரம் சமஸ்த்தானத்தில் உள்ள பல திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொண்டதுடன், அந்தக் கோயில்களில் பணிபுரியும் குருக்களும் சிவாச்சாரியர் களும் அன்றாட இறைவழிபாட்டிலும் ஆலய நடைமுறைகளி லும் ஆகமத்தைக் கடைப்பிடித்து பணிகளை நிறைவேற்றும்படி வலியுறுத்தி வந்தார். இதற்கொரு முன்மாதிரியாக விளங்க, திருஉத்தரகோசமங்கைத் திருக்கோயிலில் நடைபெற்ற கோயி கோயில் விழாவிற்கு திருவாடுதுறை ஆதீனகர்த்தரையும், சமயப் பணியாளர்களையும் வரவழைத்து விழாப்பணிகளை நிறைவேற்றி வைக்குமாறு செய்தார்.

இதனால் தான் ஒருபுலவர், இந்த மன்னரைப் பற்றிப் பாடும் பொழுது,

''ஆலயம் சீராமா அரும்புலவர் வாழ்வாரா
காலமெல்லாம் தருமம் தழைக்குமா? — ஞானச்
சாந்தகுணச் சேதுபதி தன் மரபில் பாஸ்கரனாம்
வேந்தன் பிறவா விடில்'' என்று பாடினார்.

இத்தகைய முன்னோடிச் செயல்களினால், மனநிறைவு கொள்ளாத சேதுபதி மன்னர், ஆகமங்களிலும் புராணங்களி லும் பொதிந்துள்ள உண்மைகளைச் சாதாரண மக்களும் உணர்ந்து கொள்ளுமாறு, திருக்கோயில்களுக்குச் செல்லும்

பொழுது, ஆங்காங்கு தமது அரிய சொற்பொழிவுகள் மூலம் மக்களுக்கு எடுத்துரைத்தார். அந்தந்த திருக்கோயில்களில் முறையாகப் பாராயணம், வழிபாடுகளைச் செய்த குருக்களைப் பாராட்டி அன்பளிப்பு வழங்கி ஊக்குவித்தார். இன்னும் கோயில்களுக்கு அவர் அணிந்துள்ள அணிகலன்களின் ஒன்றை யாவது அன்பளிப்பாக வழங்குவதுடன் அந்த இறைவனைத் தமது தாய்மொழியான தமிழில், பாடல்கள் புனைந்து பாடி வழிபடும் பழக்கத்தையும் கொண்டு இருந்தார். தேவாரம் பாடி வணங்கிய தமிழ் மூவரையும் திருப்பாசுரங்களால் அருசித்த ஆழ்வார் பெருமக்களைப் போல. என்னே இந்த மன்னரது தமிழ் உள்ளம்! என்னே இந்த மன்னரது தமிழ் உணர்வு!

இந்த மன்னர் இவ்விதம் இறைவனைப் பாடிப் பரவி புகழ்ந்து மகிழ்ந்த பாடல்கள் பலநூறு. இடைப்பட்ட ஒரு நூற்றாண்டு காலவரம்பில், கருத்துடன் பேணிக் காக்க மறந்த காரணத்தினால் மன்னரது மறைவிற்குப் பின்னர், அவைகளும் மறைந்து விட்டன அரண்மனைக் காப்பகத்தில் இருந்து. அவைகளில் இப்பொழுது இருபத்து எட்டுப் பாடல்கள் மட்டும் நமக்கு கிடைத்துள்ளன. மன்னர் அவர்கள், மதுரை, இராமேசுவரம், காஞ்சிபுரம் திருக்கோயில்களில் வழிபாடு மேற்கொண்ட பொழுது, காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கப் பாடிய கவி மலர்கள், அவை. எளிய, இனிய, தெய்வீகத் தமிழில், இதயத்தில் ஒன்றி நின்ற பக்தியையும் இறை உணர்வையும் வெளிப்படுத்தும் அந்த அரிய, அன்புக்கவிகளை ஒருசேரத் தொகுத்து அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற பாங்கில், அந்த மன்னரது நூற்று முப்பதாவது பிறந்தநாள் பெருமங்கல விழாவில், இன்று பணிவுடன் வெளியிடுகிறோம்.

ஆன்மீக உள்ளமும் - அளப்பரிய கொடைத்திறனும், மாண்பான மனித நேயமும், மகத்தான பக்திப் பெருக்கும் இணைந்து பெருவடிவாக வாழ்ந்து, புகழுடம்பு புகுந்துள்ள அந்தப் பெருமகனாருக்கு-இளம் மன்னருக்கு-எங்களது எளிய அன்புக் காணிக்கையாக இந்தச் சிறு நூல் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த வெளியீட்டினை, எங்களது தமிழ்ச்சங்கம், வெளிக் கொணர உள்ளது என்ற செய்தியினைக் கேட்டபொழுது, இது ஒரு நல்ல பணியென எம்மைப் பாராட்டியதுடன் இதற் கான அச்சுப்பணிச் செலவினைத் தாம் ஏற்றுக் கொள்வதாகத் தயக்கமின்றி முன்வந்து உதவியவர் எங்களது அன்புக்கும் மரியாதைக்குமுரிய முன்னாள் திண்டுக்கல் தொகுதி பாராளு மன்ற உறுப்பினரும் சென்னை உயர்நீதிமன்ற முதுநிலை வழக் குரைஞருமான உயர்திரு. கே.ஆர். நடராஜத்தேவர் அவர்கள். அன்னாரது இனிய உள்ளத்திற்கும், அரிய தமிழ்ப்பணிக்கும் எங்களது ஆழிய நன்றி!

வாழ்க மன்னர் பாஸ்கர சேதுபதி புகழ்!

இவண்

16.11.1987
இராமநாதபுரம்.

டாக்டர். எஸ்.எம். கமால்
செயலர், தமிழ்ச்சங்கம்.

மன்னரது வாழ்க்கையின் சில முக்கிய நிகழ்ச்சிகள்

பாஸ்கரரது தந்தை முத்துராமலிங்க சேதுபதி (இரண்டாவது) பிறப்பு ...	7-9-1841
''முத்துராமலிங்க'' சேதுபதி சுவீகாரம் ...	24-5-1847
பாஸ்கரரது பிறப்பு ...	3-11-1868
மன்னரது இளவல் தினகரர் பிறப்பு ...	26-4-1871
தந்தை (இரண்டாவது) முத்துராமலிங்க சேதுபதி மறைவு ...	21-2-1873
இளைஞர் பாஸ்கரர் இலங்கைச் சுற்றுலா முடித்து திரும்புதல் ...	27-2-1888
மன்னரது மணவிழா இராமநாதபுரம் அரண்மனையில் ...	13-5-1888
இராமநாதபுரம் சமஸ்தான நிர்வாக ஏற்பு ...	3-4-1889
முதல் மகன் (மூன்றாவது) முத்துராம லிங்கம் என்ற ராஜராஜேஸ்வரன் பிறப்பு ...	3-6-1889
சுவாமி விவேகானந்தரை சிக்காக்கோ மாநாட்டிற்கு மன்னர் அனுப்பி வைத்தது ...	1891
இந்திய அரசு மன்னருக்கு மகாராஜா என்ற விருது வழங்கி சிறப்பித்தது ...	1893
இரண்டாவது மகன் ராஜாராம் பாண்டியன் பிறப்பு ...	7-8-1893
நீதிமன்றம் இராமேசுவரம் இராமநாத சுவாமி ஆலய நிரந்தர நிர்வாகியாக மன்னரை நியமனம் செய்தது ...	22-9-1893
சிவகாம சுந்தரநாச்சியாருடன் மூன்றாவது திருமணம் ...	1896
சுவாமி விவேகானந்தரை பாம்பன் துறை முகத்தில் வரவேற்றல் ...	22-1-1897

மதுரையில் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் தொடங்கிய நான்காவது தமிழ்ச் சங்க விழாவில் பங்கேற்பு	14.09.1901
மகாவித்வான் ரா. ராகவ ஐயங்கார் சுவாமிகளை மதுரை மாநகரில் பல்லக்கில் சுமந்த தமிழ்ப்பணி	4.11.1901
ஜகத்குரு சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகளுக்கு இராமநாதபுரம் சமஸ்தானத்தை தானம் வழயகியது	1894
ராஜஸ்தானத்தைச் சேர்ந்த தார் சமஸ்தான மகாராணிக்கு சிறப்பான தர்பார் மரியாதை அளித்து இராமநாதபுரத்தில் வரவேற்றது ...	20-1-1894
மதுரை மீனாட்சி சுந்தரேசர் திருக்கோயிலுக்கு திருத்தேர் செய்வித்து வழங்கியது ...	28-4-1894
மன்னர் பயின்று பட்டதாரியான சென்னை கிறித்தவக் கல்லூரிக்கு ரூ. 40,000/ நன் கொடையாக வழங்கியது. ...	19-5-1894
இராமநாதபுரம் அரண்மனை ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு தங்க சிம்ம வாகனம் வழுங்கியது	13.10.1894
மேற்படி திருக்கோயில் விமானத்திற்கு தங்ககவசம் அணிவித்து குடமுழுக்கு நடத்தியது	29.10.1894
இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவனத்திற்கு ரூ.10,000/ நன்கொடை வழங்கியது	9.4.1895
சுவாமிகளுக்கு இராமநாதபுரத்தில் அரச வரவேற்பு வழங்கி தர்பாரில் கௌரவித்தல் ...	25-1-1897
கல்லிடைக்குறிச்சி திருவாடுதுறை திருமடத்தில் மன்னர் மரணம்	27.12.1903
இராமநாதபுரத்தில் மன்னரது பூதஉடல் தகனம்	30.12.1903

மன்னரது மனைவி சிவகாமசுந்தரி நாச்சியார் மரணம்	1904
மன்னரது உடன்பிறவாச் சகோதரர் பாண்டித்துரைப் பெருமன்னர் மறைவு	2.12.1911
மன்னரது தாயார் முத்தாத்தாள் நாச்சியார் மறைவு	1916
மன்னரது சகோதரர் ராஜா. தினகரர் மறைவு	11.08.1942

மன்னர் பாஸ்கர சேதுபதி
மன்னர் பாடிய பதிகங்கள்

திருஆலவாய் பதிகம்

பூமிநான் முகனும் புனிதமா லவனும்
போற்றிநின் றடிதொழும் பரம
சோமசுந் தரனே சுருதியின் முடிவே
சூழ்வினை தீர்த்தெமை யாள்வாய்
வாமியின் பாகா வழித்துணை மருந்தே
வானவா வளர்பிறை சூடி
ஆமையோ டுடனே ஏனக்கோ டணியும்
ஆலவா யமருமென் னரசே. 1

கற்பகக் கனியே கருணையங் கடலே
கயல்விழி யுமையொடு கலந்து
பொற்புற வுலக மதனினைப் புரக்கும்
பூரண புராதன முதலே
சிற்பர வெளிக்குச் செழுஞ்சுடர் மயமாய்த்
திகழும்நற் றேயுனை யறிய
அற்பமாம் அறிவோர்க் காகுமோ அறைவாய்
ஆலவா யமருமென் னரசே. 2

வருடமுப் போகம் வளருமா மதுரை
மன்னவா மாநகர்நா யகனே
குருடனும் ஒருவன் குணதிசை யுதிக்கும்
குவலய வொளியினைக் காண
மருடனால் வருந்தும் வகையினை யடைந்தே
வள்ளலே மகிழவுறக் காணேன்
அருள்தர வேண்டும் அடியேனா னுய்ய
ஆலவா யமருமென் னரசே. 3

மெய்யதாம் நின்னை மறந்துமே வீணாய்
வேள்மலர் பாணத்தால் வெந்து
பொய்யதாம் மாதர் புலைமயக் காழ்ந்து
புகலிட மின்றிமற் றொன்றுஞ்

செய்யவே நினையாத் தீமையை மறவாச்
சிந்தையைச் செய்வதென் றுரைப்பாய்
அய்யனே அமரர் அனுதினம் பரவும்
ஆலவா யமருமென் னரசே. 4

மாமனாய் வந்து மருமகன் றனக்கு
வழக்கினை யுரைக்குமென் வாழ்வே
மாமனாய் இருந்தும் மற்றவ ரிடத்தில்
வழக்கது வழங்குத லழகோ
மாமனா யிருந்த வணிகனைப் போலிவ்
வறியனை மதித்திடல் வேண்டும்
ஆமனே அரியே அசுரர்க ளறியே
ஆலவா யமருமென் னரசே. 5

மீனலோ சனியை மேவுமென் பரனே
மேன்மையாம் வழுதியன் வேண்ட
கானகத்துறையும் பாம்புடன் புலியும்
காணவே தூக்கிய காலைத்
தானமே மாறத் தந்திடு மீசன்
தரணியோர் புகழ்தடா தகையாள்
ஆனன மலருக் கருக்கினே னப்பா
ஆலவா யமருமென் னரசே. 6

மந்திர மாகும் நின்திரு நீற்றை
மதியுடன் னணிபவர் மகிழ்ந்து
சுந்தர நின்னைத் துரியமுந் துரியா
தீதமு மாகவே துணிந்து
கந்தரந் தன்னிற் கறைதனை நிறுத்தும்
கடவுளே களவிள ராகி
அந்தியும் பகலும் போற்றவே யருள்வாய்
ஆலவா யமருமென் னரசே. 7

பழமறை தேடும் பரமனே பரவும்
பத்தர்கட் கருளுந் தற் பரனே
தழற்பிழம் புருவாய்த் தாமரைக் கண்ணன்
தருக்கினைத் தணித்ததோர் தருவே
கழற்றொழு துய்யக் கடையனேன் கவலை
கொள்வதைக் கடைக்கணித் தருள்வாய்
அழலுமே யரக்கன் றன்றனக் கிரங்கும்
ஆலவா யமருமென் னரசே. 8

மாணிக்க மலையே மரகதப் பிழம்பே
மறையவர் மகிழும்நற் கொழுந்தே
காணியின் னரசி நாணவே செய்த
காட்சியே கவுனியின் மதலை
வாயாற் சுட்டி பகர்ந்திடும் பரம
பாண்டியன் புதல்வியென் றறிய
ஆணிமுத் துயரும் அணிகளு மீந்த
ஆலவா யமருமென் னரசே. 9

வேதியாம் வேய்மாலைதான் தான்சூடும்
வேந்தனே வீரனே விமலா
ஓதியே உந்தன் உயர்வுறும் நாமம்
உய்யவே உறுதியாய் உணர்ந்தேன்
சோதியே சுடரே தூய்மைசேர் சுருதி
தொடரொணாத் தோடுடைச் செவியா
ஆதியே அரசே ஆனந்த மலையே
ஆலவா யமருமென் னரசே°. 10

காமாக்ஷியம்மை பதிகம்
ஆசிரிய விருத்தம்

1) பூதலத்தின் மிக்கப் புனிதமார் புரியெனும்
போற்றுதற் கரிய காஞ்சிப்
புண்டரீகக் கணனென்று மேவர மூதவ
பொன்மாதுடன் வாழுநாள்
ஆதரவ தாகவும் வன்றனக் கருளவே
யன்றவன் பின்னுதித்த
வன்னையே நின்னையே யுன்ன லுமக்கன
மன்புருவ மாகிநின்றாய்
காதலா னின்னையே யாங்களுங் கதியென்று
கடுகினோங் கருணையோடு
காப்பது நின்கடன் முக்கணன் காதலி
கடையரேங் குறைகடீர்த்த
ஆதுரரு மாசியே யப்பனே யய்யனே
யென்றவச் சுந்தரர்க்கே
அக்கமரு ணக்கனொரு பக்கமுறை செல்வியே
யம்மை காமாக்ஷியுமையே

2) ஆதிகாலத் திலொரு பிரளயந் தன்னிலே
யச்சுதன்பாற் கடலினி
லரிதுயிலமர்ந் தவக்கா லையன் னோன்செவி
யழுக்கிலா லுற்பவித்த
காதுசின வீரராம் மதுகை டபர்களைக்
கணத்திற்றொ லைப்பிவித்துக்
காசியெலாம் போற்று கர்த்தனாம் பிரமனைக்
காத் ததன்க ருணைவாழ்வோ
மோதுபோர் புரிகின்ற மூர்க்கனாம் மகிடனை
முன்னமோர்நா ளின்வென்றாய்
முடியுமோ நின்னாற்றல் கூறவென் னமுதமே
மோனவானந் தநிலையே

ஆதவன் சசியனென் மூன்றுமே யக்கமாய்க்
கொண்டவச் சுந்தரர்க்கே
யக்கமரு ணக்கனொரு பக்கமுறை செல்வியே
யம்மை காமாக்ஷியுமையே

3) ஆலவாய்ப் பதியினின் மீனநே ரக்கமு
மத்தனாம் விஸ்வநாத
னன்புட னடியவர்க் கருள்கின்ற பதியினி
லடைந்தனை விசாலவக்கஞ்
சீலமா ரிந்நகர் செழுத்திடக் கருதியே
சேர்ந்தனை காமவக்கஞ்
தேறுமா றறிகிலே னித்திறந் தெய்வமே
செல்வமேசு ருதிவாழ்வே
தூல சூக்கு மகாராணா தீத வாழ்க்கை
பெருந் தேவி தூயநினது
தொல்லரிய மாசந்நிதா னமதை மேவினோந்
துயர்தீர வாண்டருள்வாய்
ஆலகாலத் தையர னுண்ணவே கையினி
லன்றுசொள் சுந்தரர்க்கே
அக்கமரு ணக்கனொரு பக்கமுறை செல்வியே
யம்மை காமாக்ஷியுமையே.

4) ஓங்கார வடிவமா மாலயந் தன்னுளே
யுன்னையே காணவல்லா
ருண்மையா நின்னருளை யடைவ ரென்றுறுதியா
யோதவும் வேண்டுமோதான்
ரீங்கார மத்தியி லினையிலா நடனஞ்செய்
யிரவியேயின் பமலையே
யெண்ணிலா வக்கரங் கொண்டநீ யீறிலா
வெட்டுட னொன்றுசேர்த்த
பாங்கான வக்கர முதன்மையாய்க் கொண்டதாற்
பாரினிற்பூ சைபுரிவோர்
பண்புமிகு மக்கர பொன்றினுக் கோரிரவு
பகவதிப ணிந்திடுவரால்

ஆங்கார மதுநீக்கி யைம்புல னறுத்திட்ட
வன்புமிகுச் சுந்தரர்க்கே
யக்கமரு ணக்கனொரு பக்கமுறை செல்வியே
யம்மை காமாக்ஷியுமையே

5) திரோதாயி சத்தியுஞ் சுத்தமல மங்கனே
செல்லவே முன்னதாக
சிவமெனும் பொருளொடு தேவிநீ கூடியிச்
சேதனான்மா வைரக்ஷி
வரோதய பராபர சதானந்த வெளியிலே
வாழுமோர் ஞானவெளியே
மாநிலந் தனிலுள்ள மாக்களு மறிந்திடா
வண்ணமார் பஞ்சாக்ஷரி
குரோதலோ பக்காம மோகமத மாச்சரியங்
குற்றங்களைந் தருளியே
குன்றாத பிராரத்வ சஞ்சித காம்யாதி
கொடுவினைத் தொடர்புநீக்கி
அரோகசுக வாழ்வினை யுமருளு வாய்சாலவே
யடியராஞ் சுந்தரர்க்கே
யக்கமரு ணக்கனொரு பக்கமுறை செல்வியே
யம்மை காமாக்ஷி யுமையே.

6) சரஹன பவாவெனச் சாற்றுவர் சிற்சிலர்
சார்ந்தபஞ் சாக்ஷரத்தை
தத்துவா தீதமாம் பிரவணந் தன்னோடு
சார்ந்துச் சரிப்பரிதுவே
வரஹர சடாக்கர மென்பர்சிலர் வாமியே
மகிமைசேர் மந்திரத்தை
மாறாத பக்தியோ டடியரேம் வாழவே
வழங்குவாய் சோணைமுகிலே
உரககங் கணியினா துண்மை யறியாமலே
யுழலுகின்றோம் புவியினி
லுபதேச குருவாகி நினது சேயுலகினி
லுதித்து முணர்ந் திலேம்யாம்
அரகரா வென்ற ழைத்தலறு நின்னடியார்
அற்புதச் சுந்தரர்க்கே
யக்கமரு ணக்கனொரு பக்கமுறை செல்வியே
யம்மை காமாக்ஷி யுமையே.

இராமநாதர் பதிகம்

1. அய்யனே அமரர் கோவே
அயன்முதல வர்களேத்துந்
துய்யனே சுருதிகானா துரியனே
துரியா தீதா
செய்யனே தேவதேவே செங்கண்ணால்
மேவுஞ் சீர்மை
மெய்யனே வேத கீதா
விமலனே வேணியானே

2. சேதுமா தீர்த்த மூழ்கும்
தேவரும் தவத்தோர் சேர்ந்து
மாதுசேர் பாகா நின்னை
வணங்குதல் தேர்ந்து வாண்மை
தீதருகுணங் களோங்கும் சேதுமா
பதிகள் செய்யும்
கோதரு வணக்கம் போலக்
கொள்ளுமோ உள்ளங் கூறாய்

3. மன்னவ ராகுஞ் சேது மாதலம்
புரக்கும் வர்கை
தென்னவர் முடிகள் தோயும்
திருவடி போற்றி நாளும்
முன்னவ ரானராம மூர்த்திமுன்
முடித்த கோவில்
தன்னிலே வாழு மெங்கள்
தற்பரனைப் பாடுவோமே

4. பூரண புனிதா போற்றி
புண்டரீகத் துளானும்
நாரணன் போற்ற நின்ற
நாதனே போற்றிபோற்றி

ஆரண ரூபா போற்றி அம்மையோ
டெம்மை யாரும்
கோராக் கரியை யீன்ற
தேவைமாபதியே போற்றி

5. ஆதியே போற்றி யன்பர்க
கன்பனே போற்றி தூய
ஜோதியே போற்றி துரியனே
போற்றி போற்றி
வாதவூ ரடிகள் போற்றும்
வள்ளலே போற்றி போற்றி
சேதனப் பொருளே போற்றி
தேவைமா பதியே போற்றி

6. சங்கரா போற்றி யென்றன்
ஸ்தானுவே போற்றி நாக
கங்கணா போற்றி கங்கைக்
கடவுளே போற்றி போற்றி
நங்கையோர் பங்கா போற்றி
ஞானிக ளுணரும் வண்ணம்
செங்கையின் மழுமா னேந்தும்
தேவைமா பதியே போற்றி

7. சடைதனில் மகுடஞ் சூடும்
சம்புவே போற்றி யாதி
கடையிடைக் காலம் நிற்கும்
காரணா போற்றி போற்றி
அடையவர் வினைக டீர்க்கும்
அண்ணலே போற்றி பக்தி
திடமுளோர் தெரிசித் தேத்துந்
தேவைமா பதியே போற்றி

8. இறைவனே போற்றி யேந்தல்
இமைய வனினிது நின்ற
குறைவிலா மெழிலார்க் கோதைக்
குரியனே போற்றி போற்றி
நறையுறு விடையாய் போற்றி
நான்மறைப் பொருளே பாசச்
சிறைதனை நீக்கி யாரும்
தேவைமா பதியே போற்றி

9. காலனைக் கடிந்தாய் போற்றி
கவுனியர் குலத்து தித்த
பாலநற் கருளுமென்றன் பரமனே
போற்றி போற்றி
ஆலமுண் டவனே போற்றி
அன்பர் களுய்யும் வண்ணம்
சீலமா பதங்க ளீயும்
தேவைமாபதியே போற்றி

10. ராமநா யகனே போற்றி
ராக்ஷதர் கடிந்தும் வெற்றி
தாமமும் புனையு மெங்கள்
தசரத சுதமுன் போற்றி
நாமமும் அளித்து நல்ல
நண்பர் கட்குய ருமுத்தி
சேமித்து வைக்க லான
தேவைமா பதியே போற்றி

பாஸ்கர சேதுபதி மன்னர் திருமணஊசல்

கிறித்தவக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்
சின்னசாமிப் பிள்ளையவர்கள் பாடியது.

காப்பு

1. திருமருவு மார்பன்முன மியற்றிப் போற்றி
தேவிதனக் குனாத்தவெழில் மான்மியங்கள்
மருவுமுயுர் சேதுநக ரொருகோலாச்சும்
மன்னவனாம் பாஸ்கர சாமிக் கோமன்றன்
திருமண வூசற்பாடல் செப்புதற்குத்
திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிக்
கருள்புரி பொல்லாப் பிள்ளையார் பொற்பாதம்
அன்புடனே பூமலர்கொண்ட டருச்சிப்போமே.

நூல்

2. ஐங்கரனார் திருவடித்தா மரைகள் போற்றி
ஆலவா யெந்தையுமை மலர்த்தாள் போற்றி
அங்கந்த வேள்கழற் சேவடிகள் போற்றி
அன்னையரா மோரிருவர் சரணம் போற்றி
தங்குபுகழ் விஜயரகு நாதவேந்தல்
தன்னிகராஞ் சேதுபதி குலவிளக்காம்
பைங்கழலோய் தேவியுடனாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

3. நந்தியெழிற் செம்பதும விணைகள் போற்றி
நாளுமவன் றன்னடியார் பதங்கள் போற்றி
சந்ததமுஞ் சம்பந்த றடிகள் போற்றி
தாண்டக வேந்திணை மலர்த்தாட் கமலம் போற்றி
சுந்தரனார் தூயகஞ்ச விணைகள் போற்றி
தொன்ஞான வாதவூ ரிறைதாள் போற்றி
பந்துபயில் தேவியுட னாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

4. மன்னுமறு பான்மூவர் வசனம் போற்றி
மாகாளி மாவிலட்சுமிதாள் போற்றி
தன்னிகர்மா சரஸ்வதிதண் ணடிகள் போற்றி
சதாவருள் ஸ்ரீராஜ ராஜேஸ்வரிதாள் போற்றி
துன்னியசீர்ச் சேதுமா காளியோடு
தொல்வீர மாகாளி துணைத்தாள் போற்றி
பன்னுபுகழ்த் தேவியுட னாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யோடிரூசல்.

5. சீரோங்கு தாசரதி யருளைப்பூண்ட
சேதுபதி விஜயரகு நாதச்செம்மல்
பேரோங்கு மரபின்வந்த பெருமான் கீர்த்தி
பிறங்குமுத்து ராமலிங்க ப்ரபலவேந்தல
ஏரோங்கு தவமுருக்கொண் டீண்டுதித்த
தெனாவெவரு மேத்துவள்ளால் தேவியோடே
பாரோங்கு களிதுளங்க வாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

6. தாமமணி முடிசிரத்தில் தகதகென்ன
தண்மதிநேர் முகங்கருணை பொழியநாளும்
பூமகளும் மண்மகளும் பொருந்திவர்ழும்
புஜகிரியில் வாகுவலயங்கள் மின்ன
நாமநூற் பொருள்விழையொண் செவியிற்சோதி
ஞாயிறிரண்டனைய குண்டலம் வில்வீச
பாமமா கடல்விழியொ டாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

7. ஆரகேயூர கடகங்கள் மின்ன
அழகுசெறி விரல்களில் மோதிரங்கள் மின்ன,
தாருலாங் குருவிந்த மார்பின் மின்ன
ஜாஜ்வல்ய வுதரபந்தனமு மின்ன
பேருலா மிடையரைஞாண் பளபளென்ன
பெருமிதஞ்சேர் பதவிணையிழ் கழல்கள் துன்ன
பாரிமங்க ளேஸ்வரியாம் ராணியோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

8. தற்புரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தாட்கஞ்சந்
தனைமறவா விரதநின் கைக்கமலப்போதில்
பொற்புயமார் மாதுலனார் புரிவொடீன்ற
புத்ரிமங்களேஸ்வரி நாச்சியார் கைக்காந்தள்
அற்பொடுசேர்த் தாசிபல நவின்று வாழ்த்தி
அரும்புனல்நல் கிடப்பெற்றா யவனிபோற்ற
பற்பலவா யிரவாண்டவ் விராணியோடு
பாஸ்கர சாமிக்கோவ யாடிரூசல்.

9. வண்மைதிக ழைந்தருநேர் தருவினீழல்
வானொளிசேர் பவளத்தாற் கால்கள் நாட்டி
திண்மைபெறு வயிரத்தால் விட்டஞ்சேர்த்து
செம்பொன்னா லியற்றுசங் கிலிகள்கோத்து
ஒண்மர கதத்தமைத்த பலகைமீதில்
உம்பர்மலர் மழைபொழிய வுவந்துநாளும்
பண்மொழியார் தேவியுட னாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

10 வானிலகு முடுக்களெனத் தரளங்கோத்த
மாவிந்த்ரப் பட்டுவிதானம் விளங்கத்
தானவிருஞ் சந்த்ரவட்டக் கவிகையோங்கத்
தண்ணிலவு பொழிவதெனக் கவரிவீச
கானமரு முல்லையந்தார் மார்பிலங்க
கவினுலா மரகதப்பைம் பலகைமீது
பானனைநேர் முறுவலமர் தேவியோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

11. பூசுரர்க ளாசிமொழி புகலவானில
புத்தேளிர் மலர்மாரி பொழியநாளும்
வீசுபுகழ் ப்பாவலர்பா மாலைசூட்ட
மேன்மைசெறி யிந்திரதுந்துபி நின்றார்ப்ப
தேசுலா மாதர்கள் பல்லாண்டுபாட
ஜெயவீர வன்னிதுரைச் சிங்கமால்சேய்
பாசிழையார் மங்களேஸ்வரிப் பொன்னோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

12. மாமனெனு மாதுலனோர் வடந்தொட்டாட்ட
மாமியெனு மாமியொரு வடந்தொட்டாட்ட
காமனெனு மைத்துனரோர் வடந்தொட்டாட்ட
கவினுறுசோ தரிகளொரு வடந்தொட்டாட்ட
ஆமெழில்கூ ரன்னையர்சோதரர் சுற்றத்தார்
அவனிபரன் பினரெவருங் கண்களிக்க
பாமலிசீ ரிறைமகளோ டாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

13. மடங்கலுயர் கருடனநு மான்செங்காவி
மன்னுகொடியாடத்தண் கவிகையாட
தடங்குலவு மார்பின்முல்லை மாலையாடத்
தரியலரை வணக்கும்வளை தடியுமாட
பிடிநடையார் கரகமலக் கவரியாட
பேரொளிசேர் குண்டலங்க ளிருகாதாட
படிபுகழுந் தேவியுட னாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

14. கன்னன்மொழி மாதரெழி னடனமாட
கவினுலாந் திருமுகத்திற் குறுவேர்வாட
மின்னனைய மாதர் மங்களங்கள்பாட
மேதினியு ளாரெவருங் களிகொண்டாட
மன்னரெல்வா முத்தரியம் வீசியாட
வானவருங் கண்டு களித்துக் கூத்தாட
பன்னிமங்க ளேஸ்வரிமா ராணியோடே
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

15. உரைபெருகு சேதுநக ரிறையுன்றாயர்
ஒண்மைதி கழிராணி முத்தாத்தாள் * நாச்சியாரும்
திருராணி துரைராஜு நாச்சியாரும்
தெருள் ராணி மங்களேஸ்வரி நாச்சியாரும்
தரைபுகழி ராணிகாமு நாச்சியாரும்
தன்னிகராம் விஜயலட்சுமி நாச்சியாரும்
பரிவொடுகண் களிகூரத் தேவியோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்

* நாச்சியார் என்பது நாச்சியாரென மருவி நின்றது.

16. இருநிலங்கொண் டாடுபுகழ்ச் சேதுவள்ளல்
இணையில்ரகு நாதமுத்து ராமலிங்கத்
திருவாளன் மதலாய் நின்னிளவலென்னுந்
தினகர சாமிக்கோவும் பெரியதந்தை
தருபுதல்வர் கோட்டைசாமிக் கோமானும்
தண்மையார் பாண்டிதுரை சாமிமாலும்
பரிவொடுகண் களிகூரத் தேவியோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

17. ஒன்னவரும் பணிவேள் சோதரிகளாகும்
உயர்வள்ளி மயில்நாச்சியார் வேலுநாச்சியார்
பொன்னிகராம் துரைராஜு நாச்சியார்
பொருந்து சுந்தரநாச்சியார் விஜயலட்சுமி
எண்ணு நாச்சியார் பாநுமதியா நாச்சியார்
எழில் சூரியகாந்தி நாச்சியாருங்கண்டு
பன்னரிய களிமூழ்கத் தேவியோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

18. வயல்வளஞ்சேர் சேதுநக ராசுசெய்யும்
வள்ளால்நின் மாளிகைமாப் பிளைக ளென்னும்
புயற்கர மங்களசாமிக்கோ மான்வீசு
புகழ்கொண்ட ஜெயபால சாமியண்ணல்
இயல்கந்த சாமிமால் பெரியசாமி
யேந்தலிணை யில்ராம ராஜுவேள்கண்
பயனார்ந்தோ மெனக்களிக்கத் தேவியோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

19. ஜெயவீர வன்னிதுரைச் சிங்கவேளும்
திருத்தேவி குஞ்சரநாச்சியாரும் நாஞ்செய்
நயவிரத தவபுத்ரி மகிழ்நனோடு
நானிலத் தாடுதல்கண்டு களிக்கப் பெற்றோம்
வியன்களிப்பி யாதிதனினென்னாவிழைந்து நோக்க
மெல்லியலாள் மங்களேஸ்வரி நாச்சியாராம்
பயணிலகு ராணியுட னாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்.

20. தென்னவநின் குவராணி யுட்னுதித்த
ஜெயவீர வன்னிவன்னி துரைசாமிக்கோ
சென்னியென வனனோங்கு சீர்த்தியாளன்
ஜெயவீர வன்னிவச்சி ராங்கபாண்டியன்
இன்னவர்க ளிருமருங்கு மலர்ச் செண்டோச்ச
இனிதிருந்து தேவியுட னாடிரூசல்
பன்னகவேந் துளநாணுங் கலைவலாள
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசல்

21. நிமலனார் திருவிழியிற் றேரன்றுமெங்கோன்
நெடும்புவன மிமைப்பொழுதின் வலமாய்வந்த
அமலமா மயிலுகைக்குஞ் செவ்வேள்பாதம
அநுதினமு மறவாத விரதசீல
கமலைவாழ் சேதுநக ரரசுசெய்யுங்
காவலகா வலர்மாலை கமழுமார்ப
பமரமுரல் கோதையுட னாடிரூசல்
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசம்

22. பைம்பொன்மணி யிலகுபணி யணிநின்மேனி
பற்றாசு தனையுமணி பான்மைபோல
செம்பொருள் நூற்பலவுணர்ந்த சீரியோர்கள்
செம்மையுறத் தொடுத்தணிபா மாலையோடு
அமபுவியி னேழையே னார்வுமீக்கொண்
டமைத்த புன்சொற் பாமாலை தனையும் நாளும்
பம்புவிழை வொடுதரித்துப் பாவையோடு
பாஸ்கர சாமிக்கோவே யாடிரூசம்

வாழி

23. மண்டலேஸ்வரரொவரும் வணங்கிப் போற்றும்
மஹாராஜ ராஜகெம் பீரனான
திணடிறலார் ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாஜி
சீரிரவி குலமோங்கப் புவியின்வந்த
அண்டர்புகழ் விஜயரகு நாதசேது
அண்ணல் மரபினில்வரு பாஸ்கர சாமிக்கோ
எண்டரவே நீடூழி வாழிவாழி
இராணிமங்க ளேஸ்வரி நாச்சியாரும் வாழி

24. தாரணி பாஸ்கரசாமிக் கோவையீன்ற
தாய்மார்க ளைவருநீடுவாழி
நாருறுபா ரியுஞ் சகோதரரும்வாழி
நன்மதிதோய் மாளிகைமாப்பிள்ளைகள்வாழி
நீரிலகு பெரியதந்தை பொன்னுசாமி
நெடும்புகழ்மால் தருதனையர் வாழிவாழி
காரனைய கரதலமா துலனும் வாழி
கற்பிலகு மாமிமைத்துனரும் மாழி

25. சேதுவெனு மாதலமெந்நாளும் வாழி
திண்மையுற வன்னதொரு குடையிலாளும்
ஸ்ரீதரனேர் பாஸ்கரசாமிக் கோமானும்
ஸ்ரீராணி மங்களேஸ்வரி நாச்சியாரு
மேதினியில் நீடூழி வாழிவாழி
மேன்மையுறு மன்னர்செங் கோலும் வாழி
ஓதுமவர் கிளைஞர்நட்டோ ரெவரும் வாழி
யுற்றபரி சனங்களெல்லாம் வாழிவாழி

திருமணவாழ்த்து

கன்னல்கமு கெழில்காட்டுங் காழிவரு தம்மகனார்க்
கின்னமுதந் தேவியோடு மெழுந்தருளி யுண்பித்த
மன்னவனார் திருவருளால் வாழிநனி துணைவியுடன்
பன்னுபுகழ்ச் சேதுபதி பாஸ்கரசாமிக்கோவே.

கற்றா ரேத்துங் கோலக்கா வருதம்மகனார்க்குப்
பொற்றாள மீந்தருளும் புண்ணியனார் திருவருளால்
பற்றாரும் பணிகேட்பப் பாஸ்கரசாமிக் கோவே
உற்றாருந் துணைவியொடு ஊழிபவ வாழிநீ.

தேவியுடனினிதமர்ந்து திருக்கூட வரகபுரிந்
தாவலோடு வேல்வளை செண்டரு மகனார்க்கன்றளித்த
தேவருளால் பாஸ்கரசாமிச் சேதுபதி யிறையே
ஓவற வொண்ணுதலுடனே ஊழிபவ வாழிநீ.

மன்னர் பாஸ்கர சேதுபதி பேரில் தனிப்பாடல்கள்

1. ''தங்கமலையைம் பவுனாக்கி சந்திரன் சார் கிரியை
துங்கம் பொருந்திய ரூபாயாக்கிச் சொரிந்திடினும்
திங்கள் குடைதங்கும் பாஸ்கர பூபன் செழுங்கமல
செங்கைக்கு பற்றுமா கண நேரச் செலவினுக்கே!

2. ''சீலத்தவ மறையோர் வருணசெபம் செய்யினும்
கோலக்கருமுகில் பெய்யும் பெய்யாது குகளை
எண்ணிக்க
பாலத்தில் நீறணி பாஸ்கர சேதுபதி கைமுகில்
தாலத்தில் எந்நேரத்திலும் பெய்யும் தனமழையே!

3. ''ஆலயம் சீராமா அரும்புலவர் வாழ்வாரா
காலமெல்லாம் தருமம் தழைக்குமா—ஞானச்
சாந்தகுணச் சேதுபதி தன்மரபிற் பாஸ்கரனாம்
வேந்தன் பிறவா விடில்''

4. ''பூமணக்கும் பொழில்முகவைப் புரிமணக்கும்
தவப்பேறாய் போந்து கற்றோர்
தாம்மணக்கும் பெருமையுடைது சபைமணக்கும்
பிரசங்கம் காற்றல் மேவி
பாமணக்கும் சுவைத்தமிழ்ப் படிமணக்கும்
படிபரிபாலனஞ்செல் சான்றோர்
நாமணக்கும் புகழ் மிகுந்த நலமுறுமால் பாஸ்
கரசாமி நரேந்திர கேண்மோ

5. கதியடைத்த காசிஇரா மேச்சுரயாத்
திரைமுடித்தோர் கருதா நின்ற
துதிபடைத்த தவப்பயன்தான் நினதுதரி
சனமிலையேல் தொடரா தென்பார்
நதிபடைத்த சடைநம்பர் ஆலயத்தை
வணங்குடினும் நற்சண் டேசர்
விதிபடைத்த திருவடியை வணங்காக்கால்
என்பயனோ வேந்தர் ஏறே

6. அருள்படைத்த அச்சிறப்பை அருஞ் சிறப்பாக்
கொண்டமரும் அரச ரேறே
தெருள்படைத்த நீயிருக்கும் இடந்தேடித்
தெரிசியாச் சிறியேம் உள்ள
மருள்படைத்த இடம்நாடி வந்துதரி
சனந்தந்து வாழ்வித் தாய்இப்
பொருள்படைத்த எமைப் போலும் புண்ணியருண்
டோவுலகிற் புகலுங் காலே!

— நாகை புலவர் சதாசிவம்பிள்ளை

7. ''எங்குமாம் சிவத்தின் வியாபகமும் உயிர்
பாசமெனும் இரண்டுங் கூடி
தங்கும் வியாத்தியுமவைகள் சிவத்தின் வியாப்
பியமாகுந் தன்மையும் சொல்
பொங்குபன் னூலுணர்ந்து மெய்ஞ்ஞானச்
சனகனைப் போல் புவியைக் காக்கும்
துங்கன் பாற் கரசேது மன்னனைப் போல்
புவியிலெவர் சொல்லுங் காலே!''

சேற்றூர் சுப்பிரமணியக் கவிராயர்

8. தாயனைய பாற்கரனே தமியேற்கு
நீ செய்த தயவை யார்க்கும்
வாயொன்றோ சொல்லு தென் வயிறுமிகத்
தான்சொலும் வலக்கை சொல்லும்
சேயெரளிரென் விரல் சொல்லுந் திகழுமிரு
செவிசொல்லும் செவ்வி தான
ஓயாதென் னிடை சொல்லும் ஒய்யார
நன்னடையு முணர்த்துந் தானே!

— மகாவித்வான். ரா. சாகவ ஐயங்கர்

9. ''ஒப்பிலாச் சைவமெங்கே உண்மை அறங்களெங்கே?
கைப்பில்லாத் தூயதமிழ்க் கவியெங்கே-தப்பில்லா
பாவலரெங்கே சீமான் பாற்கரவேள் தேவைநகர்
நாவலன் மேலியிடாக்கால்.

— யாழ்ப்பாணம், சிவசம்புக் கவிராயர்

10. விரித்திரம் சடையொடுகள் கரத்திளின் மான்மழு வேந்தும்
நரித்திரனைப் பரித்திரானாய் நடத்துமிரா மீசுரனை
நானும் போற்றும் நின்
உரித்துடனின் சமுகதெரிசனம் பெறவிங்காவ லுடனு
வந்து வந்தேன்
தரித்திரத்தை தறித்தெறிந் தென்றெனைக் காத்த
பாற்கர நற்றென சிங்கரேறே!
— சிவகாசி கந்தசாமிக் கவிராயர்

11. சுகந்தரு மொழியும் மணி வடநீறு
துலங்கிய தோற்றமும் பொறையும்
முகந்தரும் இருந்தண் ணனியுமெய்ப்
பொடிப்புமுகிழ் நிலாநகையும் மென்னோக்கும்
அகந்தரு கனிவு அரும்பொருள் கொடையும்
ஆருயிர் மாட்டெழு அருளும்
சகந்தரு புகழ்மைப் பாஸ்கரமன்னர்
சார்ந்ததுவும் தவத்தினிந் தவமே!
— யாழ் சிவசம்புக் கவிராயர்

12. அறந்தழைப்பத் தமிழ்தழைப்ப அருள் தழைப்ப
தெருள் தழைப்பச்
சிறந்தமுத்து ராமலிங்க சேதுபதி செயுந்தவத்தால்
கறந்த செழும் பாலனைய கரங்குலவும் இளங்கதிர்போல்
பிறந்தனனோர் குமரன் அவன் பெருமையெவர் பேசாரே

13. பவப்பனியும் புலவர்கலிப் பகையிருளும் பயந் தொளிப்பத்
தவச்சலச செழுமலரும் தமிழ்மாதின் அகமலரும்
உவப்புடனே விரிந்து இலங்க உதித்த அதன் சிறப்பு
அனைத்தும்
எவர்க்கும் அறிவுறுத்தும் வகை இசைத்தனர்
பாற்கரன் எனும் பேர்.

14. ஆங்கிலமும் ஆரியமும் ஆந்திரமும் அறியினமா
ஓங்கிய செந்தமிழமுதை உட்கொண்டு வளர்வுற்றான்
வீங்கியபூப் புயம்தாங்கி விண்ணவரும் மண்ண வரும்
பாங்குறச் செய்தான்முறை யப்பாற்கர பூபதியம்மா.

15. குடமுனியோ அவன்பால் நூல்கொண்டு அமர்தொல்
காப்பிய னோ
படமுடைய பணி இறையோ பாரதம்பாடிய
தவனோ
மிடலுறு அன்னவன் கல்வி விளம்புவ தென் என
வியப்பக்
கடலமுதப் பெருக்கென்னக் கவிபிரசங்கம் புரிவான்.

16. இரவலராய் முற்கணத்தினோர் பிற்கணத்திற்
புரவலராய்ப் பொலியும் வகை புரிகின்ற பெருங்
கொடையான்
இரவலராயினும் புகலு மென்மொழியால்
வசமாக்கும்
கரவலராம் மெய்யன் உயர் கருணைநிறை
கண்ணுடையான்

— சோதுகுடி. புலவர் அப்துல்காதிர்புலவர்

17. மேனாட்டுத் தேவகுலத் துப பேந்திரனா
வருமொரு மால்வேந்தர் மெய்க்கப்
பூநாட்டுத் தேவகுலம் தன்னில் பாற்
கரவிறையும் புகழும் வாய்மை
தானாட்டுஞ் சுந்தர தாசரசுமா
மாவுதித்தற்கோர் சான்றே தென்னின்
மாநாட்டுஞ் சேதுபதி வடமலைத்தி
ருவனெனப் பேர் வாய்ந்த தாமே.

18. ''சேதுபதி மன்னர்குலக் கடல்தோன்றி
அருணனையே சேர்ந்தோர் ஆழி
மேதினியெங் கணும்செலுத்தி இரவொழித்து
புகழொளியை விரித்துத் தேன்போல்
ஓது பிரசங்க மழைஉவந்து உதவு
பாற்கரநீ ஒடுங்கும் காலம்
ஈதுகொலோ இன்னமும்நீ எய்துவையோ
இரங்கியெமக் கிசைந் திடாயே!

19\. என்னாவி உளங்குளிர அண்ணாவென்று
அன்போடினி யெனை யார் சொல்வார்
மன்னா மன்னா வெனயாரை
யான்இனிமேல் மதித்துச் சொல்வேன்
பொன்னாடு தொழுநசேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீவேறு
என்னாடு சென்றனையோ எங்கள்குல
மணிவிளக்கே இசைத் திடாயே!

20\. அவியுணவொன் றேயருந்தும் அமரருணவு
அவியாமுன் அமுத வாக்கால்
செவியுணவுங் கொடுப்பதற்கோ நிதிமணியைந்
தருகாம தேனு வென்னும்
அவையுணரும் படியிரப்போர் குறிப்பறிந்து
கொடுக்குநலம் அறைதற் கோஇப்
புவியிலெமை வருந்தவிட்டு வான்அடைந்தாய்
பாற்கரநீ புகன்றி டாயே!

— வள்ளல் பாண்டித்துரைதேவர்

அருட்பிரகாச அகவல்

விநாயகர் வணக்கம்

பத்தி நீடிய வருட்பிர காசமஃ
தொத்த பேரக வற்குறை யோதவிங்
கத்தி யின்முக னடியிணை யைத்தினம்
சித்தத் திற்றொழு தேத்திச்சிந் திப்பமே.

நீர்சூழ் புவியிற் பேர்பல வாய்ந்தே
பற்பல வளமு மற்புத மாகத்
தந்துயிர் காக்கு மந்தமி லூர்களின்
மிக்குயர் தென்பாண் டிக்கொரு முக்கிய
நகராய் நாளும் புகரிற் கல்வியிற்

றேர்ந்து ஞான மார்ந்த கடலினிற்
றிளைத்தே காம முளைத்த லாதிய
புன்சழக் கறுத்து மின்சிவ வேட
நண்ணிய முனிவர்க ளெண்ணி வசிக்கு
மடங்களும் வெஞ்சங் கடங்க ளின்றி

ஞான வழிக்கே யான வித்தையைச்
செப்பு மாசா னொப்பின் மாணவர்
கூடி மருஉங் கோடிக முகங்களும்
பசியென் பாரிலா துசித வறுசுவை
யடிசி லூட்டும் படியா மிடங்களும்

வெயிலி லிளைத்துக் கைகாற் சோர்ந்து
வருவார்க் கெல்லாம் பெருமோர் பெய்யு
நீர்ப்பந் தர்களும் சேர்ப்பத் தூண்கட்
கட்டிய மண்டப மெட்டாத் திருமதி
லாதிய வைகளு மேதினிக் கலனாய்த்

தன்னிக ரின்றி வன்னுமிராம
நாத புரத்திற் றாதா வெனவப்
பதிக்கோர் பதியாய் வதிந்துமுத் தமிழும்
ஐய மறமறிந் துய்யும்} படிக்கா
முப்பொரு ளும்பின் செப்பிய நால்வகை

யொழுக்கங் களுமுணர்ந் திழுக்கென லின்றிப்
பூதி மணியணிந் தாதி பரமனாந்
திங்கட் சூடிய கங்கா தரனை
யுள்ளும் புறமு மெள்ளள வேணு
மறவா தெண்ணுந் திறலோ யடியார்

சொற்படி நடக்குங் கற்பகத் தருவே
நால்வகைச் சேனைக ளாற்சூ ழரசே
செற்றல ரில்லா வெற்றிக் கோவே
நற்றவர்க் கான பற்றே முற்றுஞ்
சைவங் காக்கு மெய்யாங் காவல

ரேறே பாவலர் பேறே மணியே
முத்தே முதலாஞ் சத்திய மொழிகட்
கொத்தோய் ஸ்ரீமத் நத்த விரணிய
கற்ப யாஜி யுற்பவ ரவிகுல
முத்து விஜயரகு தத்த நாத

ரோஜா வர்ண ராஜா பாஸ்கர
சேது பதியே சாது நிதியே
பாவா ணர்த்துதி பூபா லகரே.

நும்பால்

வந்தனஞ் செய்து முந்தி வரைத
லென்னெனி லென்று மன்னிய வருளை

யென்மீ திருத்த முன்வேண் டற்பின்
கைலை பரம்பரை யியலா டுதுறை
சுத்தவா தீன வித்துவான் ஸ்ரீமான்
மீனாட்சி சுந்தரக் கோனாட் சிக்கொரு
குற்றமு மின்றிக் கற்றவர் பேரை

யுலகிற் புகழ வலகி னூல்களை
வரிசையொ டியற்றுந் திரிசி ரபுரந்
தேவ சோட சாவ தானத்
தொப்பி லுளுற்றுஞ் சுப்ப ராயச்
செட்டி யார்க்காங் கட்டிக் கரும்பெண்

பேர்துரை சாமி யார்வறு மையினாற்
கிட்டா தட்ட வெட்டொடு நாலாம்
பருவத் தொட்டி வருங்காற் றந்தை
யொருபெருங் கடவு டிருவடி சேர்ந்த
வந்நாண் முதலே யிந்நாள் வறையி

லாங்கில பாடையை யோங்கிய காதலாற்
கற்றும் பரிட்சையிற் சற்றுத் தேறா
தூழின் கொடுமையாற் பாழ்வலி யொன்றா
லலுவற் சமயம் பெலனை யடக்கி
வரலாற் புத்தக தரஞ்சில விற்கவும்

விற்பனை யின்றிப் பற்பல சிறுமையுட்
பட்டே னலைந்தேன் கெட்டேன் கெடினுந்
தந்தை வைத்த சொந்த வீட்டை
சொற்ப துகையாற் பொற்பாம் பண்டார்
ஏலம் போடுங் கால விளம்பர

மனுப்பப் பலரிட மனுப்பல செய்த
வழிக்குந் தங்கையை யொழிக்கும் வதுவை
தனக்குந் தமக்கே கனக்க நின்ற
வள்ளற் பேறை யுள்ளத் தமைத்து
முன்னொரு விசையுறுஞ் சன்னி தானம்

வந்துமை யெங்கென முந்திக் கேட்ப
நயினார் கோயிற் பயண மென்ன
மன்னாஜி ராவலர் சொன்னா ரன்றியும்
பிதாவின் காலத் துதார முடனே
சென்னையிற் றம்மை முன்னை கண்டு

சற்றுத் திரவியம் பெற்ற தாகவு
நவநிசி கொலுவி வைசியம் வரவும்
விளம்பிய தாகநீர் விளம்பியு முள்ளார்

ஆகலின்

இற்றை யென்பா லுற்ற திருவிளை
யாடற் புராணவி சேடம் பெற்றுத்
தரிசன மெற்குவி மரிசையிற் காட்டி
வேண்டிய படியே யாண்டவ னருளாற்
றப்பா மற்காட் டப்பாற் பொன்னம்
பலத்தைக் காட்டிப் பெலத்த குறைகளை
நீக்கி யார்க்கும் பாக்கி யாதிய
பசல் செய்தினி விசன மின்றி
வாழச் செய்ய வேழ முகன்முத
லெவரும் போற்று மவராம்
அடியார்க் கெளிய னடியென் முடியரோ!

வாழி—வெண்பா.

வாழ்க விருநிலனும் வல்ல சிவநேயர்
வாழ்க மறையாக மங்களும்—வாழ்க
மதுரையிற் சேதுபதி மன்னனுஞ் சூழ்ந்த
விதுரசுற றத்தினருமே.

சம்பூரணம்.